**மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' அண்ணா மாவட்டம், கொடைக்கானல் பகுதியில் ஏற்பட்டுள்ள சில சூழ்நிலை காரணமாக தோட்டங்களிலும் கூப்புகளிலும் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொடைக்கானலில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. மாறாக கூப்பு ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் சிலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இப்பிரச்சினை கொடைக்கானல் வருவாய்த் துறை மற்றும் வனத்துறையைச் சார்ந்ததாக இருப்பதால் அவர்கள் முன் நிலுவையில் உள்ளது. கூப்பு ஒப்பந்ததாரர்களிடம் பணியாற்றும் தொழிலாளர்கட்கு தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்நடத்த வாய்ப்பு இல்லை.

**(9) விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படியான வழக்குகளை விசாரிக்க, அண்ணா, மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைந்துள்ளது,—**

**திரு. ஆ. பிரேம்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட் '' சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க அண்ணா, மதுரை, திருச்சி, ஆகிய மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் தேங்கியுள்ளன. மேலும் அம்மாவட்டங்களிலுள்ள மக்கள் மேற்காணும் வழக்குகள் சம்பந்தமாக திருச்சிக்கு வர வேண்டிய கட்டாய சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிரமங்களைப் போக்குவதற்காகத்தான் வருவாய் நீதி மன்றங்கள் அமைப்பதிலே

சில மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை வருவாய்த்துறை மானிய கோரிக்கையில் பதில் உரைக்கும்போது நான் தெளிவுபடுத்தினேன். மதுரை மாவட்டம், அண்ணா மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜ் மாவட்டம் ஆகிய வரம்புக்கு உட்படுத்தி ஒரு புதிய வருவாய் நீதி மன்றம் அமைக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது. விரைவில் அமைக்கும் சூழ்நிலை ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று திண்டுக்கல் பகுதியில் இருந்து திருச்சிக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படாது. மதுரையிலேயே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி வகை ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு ரெவின்யூ கோர்ட் வீதம் அல்லது ஏற்கெனவே விசாரித்தபடி அங்கே இருக்கக்கூடிய சப் கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்து இப்படிப்பட்ட இந்த ''கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட்''—சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே பல்வேறு இடங்களில் சப் கலெக்டர்களுக்கு அந்த அதிகாரம் இருந்து கொண்டு வருகிறது. சப் கலெக்டர்கள் பல்வேறு பணிகளை ஆற்றுவதன் காரணமாக இதில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே, வருவாய் நீதிமன்றம் என்று தனியாக ஏற்படுத்தப்பட்டு, கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு திருச்சியில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் மற்றும் வேறு பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட இருக்கிறது. இதன் காரணமாக வருவாய் நீதிமன்றம் என்று அமைத்து விடுகின்ற போது அதில் அமைக்கப்படுகின்ற ஆர்.டி.ஓ., அல்லது சப் கலெக்டர்கள் முழுமையாக இதைப்பற்றி ஆராய்வதற்கு வழி ஏற்படும். அந்த வகையில் அண்ணா மாவட்டத்திற்கும், மதுரை மாவட்டத்திற்கும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

**(10) அரசுப் பணிகளில் தற்காலிகமாக பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்குவது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி. பி. சிந்தன், அ. ரகுமான்கான், டி. ஆர். வேங்கடரமணன், பி. கே. எம். முத்துராமலிங்கம், ஜே. முகம்மது கனி மற்றும் ஆர். செங்காளியப்பன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்